தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 • மடங்கல் 3 (19-8-84) 65 காசுகள் இதழ் எண் :43 | பகுதி 33-34-

இந்திராகாந்தியும் செயவர்த்தனாவும் வரலாற்றடிப்படையில் தமிழினத்தின் ஒரே வகையான எதிரிகளே!

அவர்களால் தமிழினத்திற்கு இன்றுமட்டும் இல்லை, என்றுமே மீட்சி கிடைக்காது!

கிளர்ந்துவரும் தமிழினத்தை அடியோடு வலிவிழக்கச்செய்யும் அவர்களின் ஏற்பாடே, இன்றைய இலங்கைக் கொடுமைகள்!

பாவலரேறு அவர்களின் தெளிவுரை!

இலங்கையில் கண்ணுக்குக் கண்ணாகக் கொடுமைகள் நடக்கின்றன. தமிழினம் பூண்டோடு சிதைக்கப்படுகிறது; பார்க்கின்றோம்; கேட்கின்றோம். ஆனால், ஏதும் செய்ய இயலாதவர்களாக வெலவெலத்துப் போய் நிற்கிறோம். ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுகள் மூலைக்கு மூலை நடைபெறுகின்றன. இருந்தும் காட்சிகள் தொடர்கின்றன. என் செய்வது? எங்கேபோய் முறையிடுவது? இந்திய நாடோ, இந்திராவோ, இலங்கைத் தமிழர்களின் இன அழிவை நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனரே தவிர, அதட்டிக் குரல் கொடுக்கவும் மனம் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் என்ன?

வேறொன்றுமில்லை; 'இந்திராகாந்தியும் செயவர்த்தனாவும் வரலாற்று' அடிப்படையில் தமிழினத்தின் ஒரே வகையான எதிரிகளே! அவர்களால் தமிழினத்திற்கு இன்றுமட்டுமன்று, என்றுமே மீட்சி கிடைக்காது! இஃது உறுதி! உறுதி! இம்மியும் பொய்யில்லாத உறுதி!

கடந்த 83-ஆம் ஆண்டு சூலைமாதக் கலவரத்திற்குமேல் இந்த ஆண்டுக் கலவரங்கள் தொடங்கி விட்டன! சென்ற ஆண்டாகிலும் பார்த்தசாரதி நாடகம் நடந்தது! இந்த ஆண்டு இந்திராகாந்தி நாடகமே நடக்கிறது! பார்த்தசாரதிக்குப்பின், செயவர்த்தனேவும், அவருடைய மகனும், தமிழீழத்தின் இரண்டாம் எதிரியாகிய இலங்கை அமைச்சர் அதுலத் முதலியும் பலமுறை இந்தியாவுக்கு வந்து இந்திராகாந்தியைச் சந்தித்துப் பேசி, விருந்துண்டு போய் விட்டனர். சிக்கல் தீர்ந்தபாடில்லை; இன்னும் அப்படியே தான் இருக்கிறது.

அவர்கள் பேச்சுரை நாடகம், தமிழர்களின் சிக்கலைத் தீர்ப்பதற்காக இல்லை என்பதும், கிளர்ந்துவரும் தமிழினத்தை அடியோடு வலிவிழக்கச் செய்யும் அவர்களின் ஏற்பாடே இன்றைய இலங்கைக் கொடுமைகள் என்பதும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிட்டன. இது தொடர்பாக நாம் முன்பே பலமுறை எச்சரித்திருக்கின்றோம். இருந்தும் இங்குள்ள தலைவர்கள் இன்னும் இந்திராகாந்தியை நம்பிக் கொண்டிருப்பது வியப்பினும் வியப்பாய் இருக்கிறது. இன்றும் வெளிப்படையாகச் சொல்கிறோம்:

இன்றுள்ள நிலையில், இலங்கைச் சிக்கலைத் தீர்க்க இரண்டே இரண்டு வழிகள் தாம் உண்டு.

ஒன்று தமிழக விடுதலையை உலகுக்கு வெளிப்படையாக அறிவித்துத், தமிழீழப் போராட்டத்துடன் இணைந்து போராடுவது (முதலில் கருத்தளவில் போராடுவதே போதும்.)

இரண்டு, தமிழீழப் போராளிகளின் கைகளை நம்மால் முடிந்த ஒரே ஒரு வழியில் வலுப்படுத்துவது! அஃதாவது அவர்களுக்குக் கருவிகள் வாங்க நம்மால் இயன்ற தொகைகளை — குறைந்தது ஐம்பது கோடி உருபாக்களைத் திரட்டிக் கொடுப்பது.

இந்த இரண்டு வழிகளில் அல்லாமல் தமிழீழக் கிளர்ச்சிக்கு இங்குள்ள தமிழர்களால் இங்கிருந்து கொண்டு, வேறு எதுவுமே பயனுடையதாகச் செய்து விட முடியாது.

இக் கருத்துகள் இங்குள்ள பலருக்கு வேண்டாதவையாகவும், வெற்றுரைகளாகவும் சிலருக்கு அச்சந்தரும் முயற்சிகளாகவும் படலாம். இவர்களின் பயனற்ற பல்வேறு செயல்களை விட, இவையொன்றும் அத்துணைக் கீழான அல்லது பயனற்ற கருத்துரைகள் அல்ல என்பதைக் காலம் உணர்த்தத்தான் போகிறது'

இக் கால கட்டத்தில் தமிழர்களுக்கு நாம் ஒன்றை மிகவும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறோம். இலங்கையிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, தமிழர்கள் அரசியல்காரர்களை நம்பி, விடுதலையை முன்னெடுத்துச் செல்ல இயலாது; அடுத்து, சாதி, மத வேறுபாடுகளைத் தவிர்க்காமல் நாம் முழு அரசியல் விடுதலை பெறமுடியாது. இனி, அரசியல் விடுதலை பெறாமல் பொருளியல் மறுமலர்ச்சி தோன்றவே தோன்றாது. இந்த மூன்று விடுதலை மெய்ம்மங்களையும் தமிழீழ, தமிழக விடுதலைப் போராளிகள் நன்கு மனத்தில் பதிய வைத்துக் கொள்வார்களாக.

தமிழர்க்குத் தில்லி அயல்நாடே!

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க

சோவியத்து ஒன்றியத்தில் குமுகாயப் பாதுகாப்பு

சோவியத்து ஒன்றியத்தில் 4 அல்லது அதற்கும் அதிகமான குழந்தைகள் உள்ள ஏறத்தாழ 20 இலக்கம் குடும்பங்கள் இருக்கின்றன. முதல் குழந்தை முதலே, ஒவ்வொரு புதிய குழந்தை பிறக்கும் போதும், ஒருமுறை பண உதவி அளிக்கப்படுவதுடன், பல குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பங்களுக்கு (குழந்தைகளுக்கு 8 அகவை ஆகும்வரை) மாதா மாதமும் பண உதவி அளிக்கப்படுகிறது. கணவன் இல்லாத தாய்மார்களுக்கு, அவர்களுக்கு எத்தனைக் குழந்தைகள் இருந்தபோதிலும், அந்தக் குழந்தைகளுக்கு 16 அகவை ஆகும்வரை, இத்தகைய பண உதவி அளிக்கப்படுகிறது.

பல குழந்தைகளைப் பெற்றுள்ள குடும்பங்களுக்கு அளிக்கப்படும் மற்ற சலுகைகள், அறை வாடகையில் குடியிருப்பு, குழந்தை உணவு இலவசக் கொடுப்பினை முதலியவையாகும். குழந்தை பெறும் தாய்மார்களுக்கு, முழுச் சம்பளத்துடன் கூடிய மகப்பேறு கால விடுமுறை தவிர, ஓர் ஆண்டுவரை குறைச் சம்பள விடுமுறையும் அளிக்கப்படுகிறது. இரட்டைக் குழந்தை பெற்ற எவ்கெனியா சக்ரோவா என்ற பெண்ணுக்கு இத்தகைய விடுமுறை இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்டது.

நாடு முழுவதிலும், எல்லாவகையான குமுகாய உதவிகளுக்காகவும் சேர்த்து, ஆண்டுதோறும் அரசு 12,000 கோடி ரூபிள் செலவிடுகிறது. அரசு பொருள்திட்டத்தில் இந்த உறுப்பு மிகவும் வேகமாக அதிகரித்து வருகிறது. 1970-ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தப் பணிகளுக்கான செலவுகள், இப்போது இரு மடங்காக உயர்ந்துள்ளன. மக்களுக்கான ஏந்துகள் அதிகரிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

சோவியத்து ஒன்றியத்தில் குழந்தைகள் தவிர, வேலை செய்ய முடியாத முடவர்கள் செய்தியிலும் 'சோவியத்து அரசு தனிக் கவனம் செலுத்துகிறது 'இப்போது அவர்களின் எண்ணிக்கை 1.6 கோடி அவர்கள் எந்தக் காரணத்தினால் முடமாயிருந்தாலும் அவர்கள் அனைவரும் உதவித்தொகை பெறுகின்றனர்.

உடலில் சிறிய ஊறு ஏற்பட்டுள்ளவர்கள், தங்களால் முடிந்த வேலைகளைச் செய்ய அரசு ஏந்து செய்து தருகிறது. இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பல சிறப்புத் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இத்தகையவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து கொண்டே வேலைசெய்யவும் வாய்ப்புஉண்டு. இத்தகையவர்களின் ஒய்வூதியம், சம்பளம், இலவயமாக வழங்கப்படும். விசை வண்டி, சிறப்பு வாய்ப்புகளுடன் கூடிய இயங்கி, முதலிய எல்லாமாகச் சேர்ந்து இவர்களுடைய வாழ்க்கைத்தரம் கூடிய வரை உயர்வாக இருக்க உதவுகின்றன.

அரசின் குமுகாயப் பாதுகாப்புத் திட்டத்தினால் பயனடைவோரில் மிகப்பெரிய பகுதியினர் ஓய்வூதியம் பெறும் முதியவர்களாவார்கள். இவர்களின் தொகை ஏறத்தாழ 3.7 கோடி. இவர்கள் பாதுகாப்புக்காக அரசு ஆண்டுதோறும் ஏறத்தாழ 4000 கோடி ரூபிள் செலவிடுகிறது.

சோவியத்து ஒன்றியத்தில் ஊழியர்கள் முதுமைக் கால ஓய்வூதியத்துடன் ஓய்வு பெறுவதற்கு இரண்டு தகுதிகள் இருந்தால் போதும்; அஃதாவது அவர்களில் ஆண்களுக்கு 60 அகவையாகி 25 ஆண்டுக் காலப் பணி செய்திருந்தால் ஓய்வூதியத்துடன் ஓய்வு பெறலாம். அதேபோல் பெண்கள் 55 அகவையைக் கடந்து, 20 ஆண்டுக் காலம் வேலை செய்திருந்தால் போதும்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் மக்கள் வாழ்க்கை பலவகையாக வேறுபடுகிறது. சிலர் குடும்பத்தைக் கவனித்துக் கொள்வதற்கே தங்கள் முழு நேரத்தையும் செலவிடுகின்றனர். வேறுசிலர் தங்களுக்குப் பிடித்தமான வேலைகளில் ஈடுபடுகின்றனர். மற்றவர்கள், தாங்கள் முன்பு செய்து வந்த வேலைகளிலேயே நீடிக்கின்றனர்; இவ் வகையில் தங்கள் பழைய வேலைகளிலேயே, 60 அகவை அடைந்த பிறகும் தொடர்ந்து பணி புரிய விரும்புவோரின் தொகை சென்ற சில ஆண்டுகளாக அதிகமாகி வருகிறது.

அவர்கள் தங்களுக்குப் பழக்கப்பட்ட வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள விரும்பாததால் அந்த வேலைகளில் தொடர்கின்றனர் என்பதோடு கூட, கூடுதல் வருமானமும் அவர்களுக்குக் கிடைக்கிறது. இவர்கள் ஓய்வூதியத்தோடு கூடச் சம்பளமும் பெறுகின்றனர். ஊழியர்களை ஓய்வூதியம் பெற்ற பிறகும், எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாள் பணி புரியவைப்பதில் அரசுக்கும் அக்கறை உண்டு. ஏனெனில், இவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் தொழில்களில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களுடைய பட்டறிவின் பயனை இழக்க அரசு விரும்புவதில்லை.

— அலெக்சாந்தர் தேதுல்.

உ.த.மு.க உறவுமடல்

எழுத்தில் - பேச்சில்...!

தோழமை நெஞ்சங்களே,

குமரி மாவட்டத்திலிருந்து எசு.கே. சுவாமி எழுதிய 'எழுத்திலிருந்தும்', பறம்பை ஆ.வை. மேனிலைப் பள்ளி இலக்கிய மன்றத்தில் தா. பாண்டியன் பேசிய 'பேச்சிலிருந்தும்' கிடைத்த கருத்துகளை உங்கள் முன் வைக்கிறேன். அவற்றில் இழைந்தோடும் 'தமிழ் உணர்வை' அறிவோம்!

எசு.கே. சுவாமி ஒரு பொதுமையாளர். ஆனால் 'கட்சி'யில் இல்லாதவர், தா. பாண்டியன் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியாளர். இவர்களில் முன்னவர் 'பகத்சிங் பதிப்பகம்' மூலம், பொதுமைக் கருத்துகளை ஆய்வுக்கு வைக்கிறார். பின்னவரோ ஒரு திட்டத்தின் கீழ் செயல்படுபவர். இவரை நேரில் பேச்சில், எழுத்தில் சந்தித்துள்ளேன்!

இன்று, பொதுமைக் கருத்துடையவர் தமிழ், தமிழினப் பற்றுக்கு அப்பாற்பட்டவர் - பற்றற்றவர் என்று திரித்தும் மறுத்தும் பேசிவருவதைக் காண்கிறோம். இவர்களின் கருத்துகளை ஆய்வுசெய்து புரிந்து கொண்டவர்கள் சரியான கருத்தில் செயல்பட முடியும். ஆகவே,

முதலில் எழுத்தில் பெற்ற கருத்துகளைப் பார்ப்போம்!

1. தமிழார்வம் மிக்கக் கருத்துகளைப் பற்றி என்னால் இயன்ற அளவு சிந்தித்து ஒரு முடிவுக்கு வர முயலுகிறேன்.

2. இந்தியாவின் இன்றைய சூழ்நிலையில் தமிழ் நாடு பிரிந்து செல்ல முயலுவது அமெரிக்க வல்லாண்மை -(ஏகாதிபத்திய) -நுழைவுக்கு வழி கோலுவதாகும்.

3. முதலில் இந்தியா சிவப்பு இந்தியா ஆகட்டும். பிறகு தமிழ்நாடு பிரிந்து நிற்க வேண்டும் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது.

4. மாந்தக் குமுகாயம், மொழி இவ இரண்டிலும் மாந்தக் குமுதாயமே முதன்மையானது; முகாமை யானது. மொழி இரண்டாந்தர முகாமை உடையது.

5. மாந்தக் குமுகாயத்திற்காகத்தான் மொழியே தவிர, மொழிக்காக மாந்தக் குமுகாயமன்று.

6. மொழி மாறும் இயல்புடையது. அஃது எப் பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும். இந்த மாற்றத்தினால் சிலமொழிகள் வழக்கற்றுப் போய் விடும்; புதுப் புதுமொழிகள் தோன்றும்.

7 காலதேசப் பரிமாற்றங்களுக்கு ஏற்ப எல்லா மொழிகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன. தமிழ் மொழியும் அவ்வண்ணமே.

8. தனித் தமிழ்ப்பற்று உடையோர் போடும் தடைகளை மீறிக்கொண்டு தமிழில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மேற்கண்ட மடல் கருத்துகளை அவர் நேரில் பேசி முடிவு காண விழைந்திருக்கிறார். இவர்தம் அறியும் பண்பு போற்றுதற்குரியது! சிறந்த மார்க்சிய ஆர்வலராகவும் அறிஞராகவும் உரியவர்!

தோழமை நெஞ்சங்கள் இக் கருத்துகளைப் பற்றித் 'தமிழ்நில'த்திற்கு எழுதுதல் வேண்டும்!

அடுத்து, பேச்சில் பெற்ற கருத்துகளுக்கு வருவோம். இவை ஒரு கனத்த சிந்தனைக்குக் காரணமாக இருப்பவை. இதனையும் படித்து ஊக்கமும் உணர்வும் கொண்டு கருத்தறிவியுங்கள்.

தா. பாண்டியன், தி.மு.கவின் கலை இலக்கியக் கண்ணோட்டத்தைத் திறனாய்வு செய்து 'இளைஞர் நெஞ்சில்' இடம் பிடித்தவர்! மாணவர் குரலில் முழங்கி மதிப்புப் பெற்றவர். இவர், இந்தியப் பொதுமைக் கட்சியில் 'இலக்கியத் தென்றல்' என்று பாராட்டப் பெறுபவர். இவரை,மன்ற வரவேற்பாளர் 1954 இல் 'ஒடுக்கப்பட்டவர், பணக்காரர் பிடிகளிலிருந்து விடுபட வேண்டும்' என்று விரும்பிய மாணவராக விளங்கியதைச் சுட்டிக் காட்டினார்.

28-7-84 இன்று (1984) அவர்தம் வளர்ச்சியை வரவேற்றுப் பேசிய தலைமையாசிரியர், 'ஆசிரியர், மாணவ ஐந்துநாள் பணியாற்றி ஆறும் நாள் ஓய்வாக இருந்து' பாடம் அல்லாத பாடம், பயில வந்துள்ளனர். அரசியலில் சுழன்று வரும் தா.பா, ஓய்வாக அரசியலுக்கு அப்பால் நின்று பேச வந்திருக்கிறார்' என்றார்.

பல்வேறு பேரறிஞர் வந்து பேசிய பள்ளிக் கூடம் என்று பலர் பெயரைச் சுட்டிக் காட்டினார் தலைமை ஆசிரியர். அப்போது, 'கலைஞர்' வந்தார் என்றதும் கைதட்டல் மாணவரிடம் அலையாக எழுந்தது! இதனால், 'தமிழ் உணர்வு' மாணவரிடம் மங்கி விடவில்லை என்பது தெளிவாக வெளிப்பட்டது.

பின்னர் தா. பாண்டியன் பேசினார். அவர் பேச்சில் 'தமிழ், தமிழர், தமிழர் பழந்தமிழ் நாகரிகப் பண்பாட்டுச் சிறப்பு' எடுப்பாக விளக்கம் பெற்றது! அவர் பேச்சில் பெற்ற கருத்துகள். கவனமாகப் படித்துக் கருத்துகளைப் பற்றித் திறனறிந்தெழுதுங்கள்!

1. 'பாடத்திற்கு அப்பாலே எதுவும் போய்விடக் கூடாது என்ற அச்ச உணர்வு உள்ளது'. ஆசிரியர் விரும்பினாலும் அது நடவாது. வெளியில்தான் நாம் அதிகம் கற்றுக் கொள்கிறோம்.

2. ஒரு கோட்டைக்குள் இளம் தலைமுறையை வளர்த்தெடுக்க முடியாது. இரண்டிற்கும் பொதுவான வழி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

மின்துறையில் குறைகள் களையப்படுமா?

மின்துறை அமைச்சகத்துக்கும், மின்துறை தலைவருக்கும், தொடர்புள்ள அலுவலர்களுக்கும்,

மின் கட்டணம் கட்டும் போது ஏற்படும் இடர்ப்பாடுகளையும் அதைப் போக்கத் தீர்வென்ன என்பதையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

வணிகத் தொடர்பான மின்விசைப் பயன்பாட்டுக்கு மின் அலகு (யூனிட்) ஒன்றுக்கு 90 காசுகள் என்றும், மனைப் பயன்பாட்டுக்கு 55 காசுகள் என்றும் தெரிகிறது.

ஒவ்வோர் அட்டையில் இன்னும் '45' காசுகள் என்றே குறிக்கப்பட்டுள்ளது குழப்பத்தைத் தருவன. மின் அலகு கணக்கீட்டு முறையோ, கட்டண அளவு கணக்கீட்டு முறையோ மிக வருந்தத் தக்கது. ஒவ்வொரு முறையும் கட்டப்படும் தொகை மிகையாகவோ, குறைவாகவோதான் உள்ளது. குறித்துத் தரும் தொகை ஒன்று கட்டும்போது கேட்கும் தொகை வேறு.

காட்டாக, 25 அலகுகள் ஓடியுள்ள ஒரு வணிகத் தொடர்பான பயன்பாட்டுக்கு $25 \times 90 = 22.50$ தான் குறித்திருக்க வேண்டும். ஆயின் குறித்திருந்தது உரு. 38.30. கட்ட நேர்ந்ததோ உரு. 47/ — கடைசி நாளில் 38.30 மட்டுமே கொண்டு சென்றுள்ள ஒருவர் கட்ட முடியாது படும் அல்லல் கணக்கிலடங்காது. மேலும், எவ்வகையில் கணக்கிடப்பட்டுள்ளது என்பதே குழப்பத்தைத்தான் விளைவிக்கிறது. கணக்கீட்டுக்குச் செல்லும்போது இல்லங்கள் பூட்டிக்கிடப்பதால் கணக்குக் குறிக்க இயலாமற் போகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. மிகையாகத் தண்டுவதும் பின் திருப்பிக் கழித்துக் கொள்வதுவும், குறைவாகத் தண்டி, அடுத்துக் கூட்டிக் கொள்வதும் பெரும் இன்னலைப் பொதுநிலை மாந்தருக்குத் தருவன. மின்கட்டணம் செலுத்தக் கடைசி நாள் சரிவர முன்னமே அறிவிக்கப்படுவதில்லை.

(அ) தேவையான அளவுப் பணியாளர்களை அமர்த்தம் செய்வதில் காலந் தாழ்த்தக் கூடாது.

(ஆ) கணக்கீட்டு முறையைச் சரிவர அறிந்திருக்கக் கூடியவரே கணக்கெடுக்கச் செல்ல (அனுப்ப) வேண்டும். கணிப்பான் (calculator) வழங்குதல் மேலும் நலமே.

(இ) குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட பகுதி என்பதாக முன்னமே தெரிவித்து விடல் வேண்டும். (நயன்முறைக் கடைகளில் போல.)

(ஈ) மின் கட்டண உயர்வை மாற்றம் ஏற்படுத்தப்பட்ட உடனே அட்டையில் குறித்துத் தந்துவிட வேண்டும்.

(உ) மின் அளவுக் கருவிகள் அடிக்கடி சரிபார்க்கப்பட வேண்டும்.

(ஊ) மின்கட்டணம் செலுத்த கடைசி நாளை முன்னமே (முன் திங்களே) அறிவித்து விட வேண்டும். மேற்கண்ட முறையில் செயற்பாடு நிகழுமாயின் குறை தீர்க்கப் படலாம் என நம்புகிறோம்.

— தாரை, தமிழ்வென்றி

அற்றை மனுநூல் அழியும்வரை இந்நிலத்தே

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வு உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 43 (19-8-84) பகுதி 33-34

இந்தியாவும் இலங்கையும்!

எப்பொழுதுமே ஆளும் இனத்தினர், ஆளப்படும் இனங்களை, அடக்கி ஒடுக்கவும், உரிமைகள் கேட்பதைத் தடுக்கவும் ஒரே வகையான நடைமுறைகளையே கையாளுகின்றனர்.

அவற்றுள் தேசியம், ஒருமைப்பாடு நாட்டு நலன் என்பன வாகக் காரணங்கள் காட்டப்படும் உத்தி ஒன்று. அடுத்து, தனக்குச் சார்பான வல்லாண்மை நாடுகளை ஒன்றிணைத்துக் கொள்ளும் உத்தி இரண்டு. இன்னும், நாட்டு முன்னேற்றங்கள், வளர்ச்சித் திட்டங்கள் இவற்றை அடிப்படையான காரணங்களாகக் காட்டி, மக்கள் மொழி, இன, சமய, சாதி வேறுபாடுகளைத் தவிர்த்துக் கொண்டு ஒன்றுபடவேண்டும் என்னும் பல வேறான கூற்றுகள், நடைமுறைக் கோட்பாடுகளை நயன்மையாக (நியாயமாக) மக்கள் கருதும்படி கூறி, உரிமை யெழுச்சிகளை அடக்குவது போலும் உத்திகளும் உண்டு.

இக்கால் நடந்துவரும், இந்திய, இலங்கை இன நலப் போராட்டங்களையும், இந்நாடுகளின் ஆளும் இனத்தினர், மேற் காட்டிய காரணங்களைக் காட்டியே அடக்கவும் ஒடுக்கவும், முடிந்தால் அழிக்கவும் ஒழிக்கவுமே பார்க்கின்றனர்.

இந்தியாவில் நாகாலாந்து, மிசோரம், அசாம், பஞ்சாப் ஒரிசா ஆகிய மாநிலங்களிலும் வேறுசில வாழ்வினங்களுக்கிடையிலும் இனநல மீட்சிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்திலும், பிற தென்மாநிலங்கள் ஒன்றிரண்டிலும் கூட இப் போராட்டங்கள் கனன்று, இன்றோ நாளையோ வெடிக்கும் என்னும் நிலையில் இருந்து வருகின்றன.

இலங்கையில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் உள்ள இனப்போராட்ட எழுச்சிகள் கடந்த முப்பதாண்டுக்காலமாகவே நடைபெற்று வருகின்றன. இந்தியாவிலும், இலங்கையிலும் நடைபெறும் இப் போராட்டங்கள் ஒரே வகையாகவே அடக்கி யொடுக்கப்படுவதை அவற்றைக் கூர்ந்து நோக்குபவர்கள் நன்கு உணர்வார்கள்.

முன்பொருமுறை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி தன் நாட்டின் அரசியல் கருப்புச் சட்டங்களுக்கு நயன்மை கற்பித்துப் பேசுகையில், 'நாங்கள் கொண்டு வந்துள்ள சட்டங்கள் கொடுமையானவை என்று கூறப்படுகின்றன. ஆனால், இவை கடந்த 1976-இல் இந்தியாவில் நெருக்கடி நிலைக் காலத்தில் இந்திராகாந்தியால் கொண்டுவரப்பட்ட சட்டங்களைப் போன்றவையே' என்று கூறியதைப் பலர் கவனித்திருக்கலாம். அவர் கூறியதில் உண்மை இல்லாமல் இல்லை.

இப்பொழுது, அண்மையில் கூட இலங்கைத் தலைவர் செய-வர்த்தனே, இலங்கையில் தேசியத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பதற்காக வன்முறையாளர்களை ஒடுக்கியாக வேண்டிய கட்டாயம் இருக்கிறதாகக் கூறியுள்ளார்' இக் குரல் இந்திரா காந்தியுடையது என்று நமக்கு எல்லாருக்கும் நன்கு தெரியும்.

இதில் இன்னோர் உண்மையையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்திராகாந்திக்கு எல்லாவகை ஆளுமை நிலைக்கும் உருசியா பின்வலிவாக உள்ளதைப் போலவே, செய-வர்த்தனேவுக்கும் அமெரிக்கா பின்வலிவாக உள்ளதை நாம் அறிய வேண்டும்.

அண்மையில் ஆகத்து 15 விடுதலைநாள் உருசியாவில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பொதுவாக உருசியாவில் உள்ள இந்தியத் தூதுவ அதிகாரிகளுடன், உருசிய உள்துறை, வெளிநாட்டு அரசியல் துறை அதிகாரிகள் மட்டுமே கலந்துகொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு விழாவில், உருசிய முதல் துணைத் தலைமை அமைச்சர் அவர்களும், வெளிப்புற உறவு அமைச்சர், தொழிலமைச்சர்களுடன் பங்குகொண்டுள்ளனர் என்பது உற்று நோக்கத்தக்கது. இனி, இதைவிட, அவர் பேசியது மிகவும் கவனிக்கத்தக்கது. அவர் பேச்சில் இந்தியாவில் நடைபெறும் உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவதற்குத் தலைமையமைச்சர் இந்திராகாந்தியின் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையான ஆதரவு தெரிவிக்கப் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையான நிலை விளக்கம் என்ன? செய-வர்த்தனேவுக்கு அங்குள்ள தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க, அமெரிக்கா எந்த அளவு துணை போகிறதோ, அந்த அளவுக்கு, இங்குள்ள அசாம், பஞ்சாப் இன்னும் தமிழகத்தின் உரிமையெழுச்சிகள் உருசியப் பின்பலத்துடன் அடக்கி அழிக்கப்படும் என்பதே!

பஞ்சாபில், அமிர்தசரசு பொற்கோவிலில் இருந்த அகாலி தள வீரர்களுடன் பாக்கித்தானிய வீரர்களும் இருந்ததாகக் கூறப்படும் அதே வேளையில், இந்தியப்படை வீரர்களுடன் உருசியப் படையைச் சேர்ந்த அதிகாரிகளும் சிலர் இருந்தாகச் செய்திகள் கூறுகின்றன.

எனவே, உரிமையெழுச்சியை அடக்கவும் ஒடுக்கவும் ஆன முயற்சியில் இலங்கையும் இந்தியாவும் ஒரேவகையான முறைகளைத்தான் கடைப்பிடிக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இரண்டு திருடர்கள் எப்பொழுதுமே ஒருவர்க்கு ஒருவர் மாறாகச் செயல்பட முடியாது ஆகவே, இந்த வகையில், இந்திராகாந்தியும், செயவர்த்தனேவும் வேறுவேறானவர்கள் அல்லர். அதேபோல் இருவர்க்கும் பொது எதிரியாக இருக்கும் இனமும் தமிழினமே! இந்நிலையில் தமிழினம் இருவரிடமிருந்தும் அன்பையோ ஆதரவையோ இரக்கத்தையோ, அல்லது இணக்கமான முறையில் அரசியல் தீர்வையோ எதிர்பார்ப்பது அறியாமையிலும் அறியாமையே!

அமெரிக்கா என்றால், அமெரிக்காவுக்குச் சார்பான அத்தனை நாடுகளும், (பாக்கித்தான் இசரேல் முதலிய நாடுகள்) செயவர்த்தனேவுக்குத் துணை போவது இயல்பே! அதுபோல் உருசியா என்றால், இந்திராவுக்குப் பொதுவுடைமைநாடுகள்,பொதுவுடைமைக்(வலது,இடது)கட்சிகள், தலைவர்கள் துணை போவது இயல்பே!

இதில் விழிப்பாயிருக்க வேண்டியவர்கள் தமிழர்களே! அவர்கள் இங்கிருப்பவர்களாய் இருந்தாலும் சரி, இலங்கையில் உள்ளவர்களாய் இருந்தாலும் சரி 'எதிரியின் எதிரி நண்பன்; நண்பனின் எதிரி, எதிரி'—என்னும் வகையில், இந்திராவுக்கும், செயவர்த்தனேவுக்கும் நண்பர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தமிழர்களுக்கும், தமிழினத் தேசியப் போராட்டத்திற்கும் எதிரிகளே! இதைத் தமிழர்கள் முற்றாக உணர்ந்து கொண்டு தம் முன்னேற்றச் செயல்திட்டங்களை அமைப்பது இன்றியமையாதது!

பார்ப்பனரின் செய்திப்பரப்பு முயற்சிகளும் நம்மவரின் இளித்தவாய்த் தனங்களும்!

பார்ப்பனர் செய்கின்ற அறிவு முயற்சிகளில், அறிவை மதித்துச் செயல்படுகின்ற தன்மைகளில் நூற்றுக்கு ஒரு விழுக்காடேனும் நாம் செய்வதில்லை. அவன் நடத்துகின்ற தினமணி, சுதேசமித்திரன், கல்கி, ஆனந்தவிகடன், இதயம், துக்ளக், தினமணிக்கதிர், இந்து, எக்சுபிரசு, தினமலர் போன்ற இதழ்கள் போல் ஒன்றையேனும் நம்மால் நடத்த முடிகிறதா? ஏன் முடியவில்லை? பணமில்லையா? நம்மிடம் இல்லாத பணமா? நம்மவர்களிடமில்லாத பணமா? கோடிக் கோடியாய்க் கோயில்களுக்கும் குடமுழுக்குகளுக்கும் செலவிடவில்லையா? அவற்றைக் கொண்டு அவர்கள்தாமே பிழைக்கின்றனர்! இனி கோடிக் கோடியாய்ப் பணத்தைச் செலவிட்டுப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும், மருத்துவமனைகளும் கட்டவில்லையா? அவற்றிலும் அவர்கள்தாமே படித்து முன்னுக்கு வருகின்றனர். செய்தித் தாள்கள் நாமுந்தாம் நடத்துகின்றோம், வெட்கங்கெட்டத்தனமாக! சாக்கடைப் பேச்சில், நரகல் செய்தியை எழுதும் தினத்தந்தி! சந்து பொந்து செய்திகளை விளம்பரப்படுத்தும் தினகரன்! மத எதிர்ப்புகளாலும், மண்டல் அறிக்கைகளாலும் இந்நாட்டு மக்களைக் கைதூக்கிவிட்டுவிட முடியும் என்று நம்புகின்ற விடுதலை! கழகச் செய்திகளையும் கலைஞர் எழுத்து பேச்சு இவற்றை மட்டும் பெரிதாக விளம்பரப்படுத்திக் கொள்ளும் முரசொலி! மற்றும் இன, மொழி, நலம் நாடாமல் பணநலமே குறிக்கோளாக உள்ள, விளம்பர அறிக்கைகள் போல், துண்டு துணுக்குகளாக வெளிவரும் நண்டு நறுக்குகள்! போதுமா, நூற்றுக்குத் தொண்ணூறு பேராகவுள்ள நம் தாழ்ச்சிகள், முயற்சிகள், தேவைகள், கருத்துகள், வரலாறுகள்—இன்ன இவற்றையெல்லாம் உலகமுழுவதும் பறைசாற்ற! எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஆயிரக்கணக்கில் அச்சிட்டுத் திரவிட எழுச்சியை உண்டாக்கிப் போராட்டம் நடத்தி வெற்றிக் கொள்ளக் கனவு காணும் சின்னஞ்சிறு கலப்புத் தமிழ் இதழ்கள் எங்கே! ஒரு சிறு செய்தியானாலும் பார்ப்பன இனத்துக்கு வந்ததெனில் அதை உடனுக்குடன் உலகமெலாம் பரப்பும் 'இந்து போலும் செவ்விய ஆங்கில நாளிதழ்கள் எங்கே! போதுமா நமக்குள்ள போராட்டக் கருவிகள்? உண்மையாக எண்ணிப்பார்க்க வேண்டும்! மக்களை ஏமாற்றக் கூடாது!

— நன்றி 'தென்மொழி' செப்-1980

தனித்தமிழ் முயற்சிகளும் நம்மவர் நெகிழ்ச்சிகளும்!

பார்ப்பான் தன் வேத மதக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே ஏற்படுத்திக் கொண்ட சமசுக்கிருத மொழியை, அவன்தான் பெருமையுடனும், விடாப்பிடியாகவும் பயன்படுத்துகின்றானென்றால், 'பொது மக்களுக்குப் புரியுமென்று' நாமும் ஏன் அந்த மொழியில் எழுத வேண்டும்? பேச வேண்டும்? ஆங்கிலத்தில் பேசினாலே புரிந்து கொள்ளக் கூடிய தமிழர்கள், தங்கள் தாய்மொழியாகிய தமிழில், தமிழ்நாட்டில், பேசினால் எழுதினால் புரியாது என்று சொன்னால் எங்கேபோய் எதில் முட்டிக் கொள்வது? பின் எதற்குத்தான் தமிழ்மொழி? எல்லாரும் சமசுக்கிருதமோ, இந்தியோ இல்லை, ஆங்கிலமோ படித்துக் கொண்டால்தான் போகிறது! என்ன இழிவு. அவன் 'இயம்' வேண்டாமாம்; அவன் 'தேவ பாசை'தான் வேண்டுமாம்! இஃது என்ன அறிவு! அல்லது கொடுமை' இப்படி ஓர் இனமா? இன மக்களா? தன் தாய்மொழி தேவையில்லை என்பது! பார்ப்பான் மொழியில் கருத்தைச் சொன்னால் தான் விளங்கும் என்பது ஆனால் அவனையும் அவன் 'இயத்'தையும் வெறுப்பது! இஃது என்ன திரவிட இன முன்னேற்ற முயற்சி! தமிழின முன்னேற்ற முயற்சி! நாங்கள் அடித்துச் சொல்லுகிறோம் தமிழன் தன் சாதி வெறியை ஒழித்துக் கொள்ளாத வரை, தூய தமிழை வளர்க்காத வரை அவன் பார்ப்பனியத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதை எவராலும் மீட்கவே முடியாது! பார்ப்பனியத்தையும் ஒழிக்கமுடியாது. ஏனெனில் பார்ப்பனியம் என்பது சாதிப் பிரிவுகளிலும், மொழிக் கலப்பிலும் கால்வைத்துக் கொண்டிருக்கும் ஒரு பூதம்' அதை வெருட்ட வேண்டுமானால் நாம் அவற்றிலேயே வைத்துக் கொண்டிருக்கும் கால்களை எடுத்துக்கொள்ள வேண்டும் இல்லாவிடில் அந்த முயற்சி பயனளிக்காது. மலத்தில் கால் வைத்துக் கொண்டு சாணியைக் கழுவமுடியாது. இதை நம்மவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

— நன்றி-தென்மொழி
செப்-1980.

உங்கள் ஊரில் 'தமிழ்நிலம்'?

உங்கள் ஊரில் 'தமிழ்நிலம்' கிடைக்கவில்லையா? அது கிடைக்கும்படி நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது? 5 உருபா அனுப்புங்கள் 10 படிகள் அனுப்புகிறோம். ஒன்று 65 காசுக்கு விற்று மிகுதிக் காசை உங்கள் செலவுக்கு ஈடு கட்டிக் கொள்ளுங்கள்! இன்றே அதுபற்றி எண்ணிப் பாருங்கள்!

ஒற்றுமையும் பூக்காது; ஒருமையுளம் காய்க்காது.

ஈப்போ, பாவாணர் தமிழ்மன்றத் தலைவருடன் ஒரு நேர்வுரை!

— நம் சிறப்புச் செய்தியாளர் —

அண்மையில் மலேசியாவில் உள்ள ஈப்போ, பாவாணர் தமிழ்மன்ற அமைப்பாளரும், முன்னாள் தலைவரும், அடிநாள் தொட்ட தென்மொழி அன்பரும், புரப்பாளரும், பரப்பாளரும், நம் ஆசிரியர் பாவலரேறு அவர்கள் 1974-ஆம் ஆண்டு மலேசியா சென்றிருந்த பொழுது, அவரை ஈப்போ நகரில் வரவேற்றுப் பேணிப் புரந்து சிறப்புச் செய்த பெருந்தகையாளரும் ஆகிய, பாவலர் திரு. சா. சி. சுப்பையா அவர்கள், முப்பத்தைந்தாண்டு களுக்குப்பின், முகவை மாவட்டத்தில் உள்ள அவரின் சொந்த ஊருக்கு வந்திருந்தார்கள்.

அவர், சென்னைக்கு வந்து ஊர் செல்லும் முன்னும், ஊரினின்று திரும்பி சென்னை வந்து வானூர்தி வழியாகக் கடந்த 27—7—84-இல் மலேசியா திரும்பும் பொழுதும், தென்மொழி, அலுவலகத்திற்கும், உ.த.மு.க. அலுவலகத்திற்கும், ஆசிரியரின் இல்லத்திற்கும் வந்திருந்து பாவலரேறு அவர்களிடம் உரையாடி மகிழ்ந்திருந்து சென்றார்கள்.

ஏறத்தாழ 10 ஆண்டுகள் கழித்து இரு பெரும் நல்லுணர்வாளர்களும், ஒருவரையொருவர் உள்ளுணர்வுடனும் பேரன்புடனும் கண்டு மகிழ்ந்து, பேசி உவந்த காட்சி காணுதற்கு அரியதாகும். பாவலரேறு அவர்கள், திரு. சுப்பையா அவர்களை நீண்ட நாள்கள் தம் இல்லத்திலேயே தங்கியிருக்கக் கேட்டும், அவர்கள் ஊர் சென்று சிலநாட்கள் அங்குத் தங்கியிருக்க வேண்டிய இன்றியமையாலும், பின்னர் சென்னை வந்து உடனே திரும்ப வேண்டிய கடப்பாட்டாலும், சென்னைத் தங்கல் இயலாமற் போய்விட்டது.

மேலும், திரு சுப்பையா அவர்களுக்கு விரிவான முறையில் சிறப்பான ஒரு பாராட்டும், வழியனுப்பும் ஐயா அவர்கள் செய்ய விரும்பியும், தமிழீழப் போராளிகளின் துயரநாள் கடைப்பிடிப்பாலும், காலம் ஒத்துவராமையாலும் அதுவும் முழு அளவில் நிறைவேறுமல் போய்விட்டது.

ஆனாலும், ஒரு சிறு அளவிலேனும் அவருக்குப் பாராட்டுச் செய்ய விரும்பிய பாவலரேறு ஐயா அவர்கள், தமிழீழப் போராளிகளின் துயர நினைவுநாளான, கடந்த 25-7-84 அன்று, பிற்பகல் 5 மணி அளவில், நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழக அலுவலகத்திலேயே, நம் கழக அன்பர்களும், குடும்பத்தினரும் பலர் நிறைந்திருக்க, பாவலர் திரு. சுப்பையா அவர்களுக்கு, ஒரு பாராட்டு விழாவும், வழியனுப்பு விழாவும் நடத்திச் சிறப்புச் செய்து, அனைவரையும் மகிழச் செய்தார்கள்.

அன்று நடைபெற்ற கூட்டத்தில், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் தென்மொழி ப. முருகவேள் வரவேற்புரையாற்றினார். பாவலரேறு ஐயா அவர்கள் தலைமையேற்று, திரு. சுப்பையா அவர்கள் தூய தமிழ்த் தொண்டு பற்றியும், தென்மொழியை ஆயிரம் படிகளுக்கு மேல் விற்று மலேசியா முழுவதும் பரப்பிய அவரின் அருளாண்மையும் திறலாண்மையும் பற்றியும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுக்கு மிக விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறினார்கள்.

அதற்கு ஏற்புரையாக திரு. சுப்பையா அவர்கள் மலேசியாவில் வாழ்கின்ற தமிழர்கள் பற்றியும், தம் தூய தமிழ்த் தொண்டு பற்றியும், பாவாணர் மேலும் தென்மொழியின் பாலும் தாம் கொண்டிருந்த ஈடுபாடுகள் பற்றியும் மகிழ்வோடும் பெருமிதத்தோடும் குழுமியிருந்த அன்பர்களுக்கு நகைச் சுவையோடும் விளங்கக் கூறினார்கள்.

இடையில், பாவலரேறு ஐயா அவர்கள் ஈப்போ பாவலர் திரு. சா. சி. சுப்பையா அவர்களுக்குத் தம் அன்பின் அடையாளமாகக் கழகச்சார்பில் கைத்தறியாடை ஒன்றைப் போர்த்தி வாழ்த்தினார்கள். பின்னர் கழகச் சார்பாக ஈப்போ பாவலர்க்குத் தேநீர் விருந்தொன்று சிறு அளவில் தரப்பெற்றது.

இறுதியில் பாவலர் திரு. சா. சி. அவர்கள் அனைவரிடமும் அன்புடனும் கனிவுடனும் விடை பெற்றுச் சென்றார்கள்.

திரு. சா. சி. அவர்கள் நம் தென்மொழி இல்லம் வந்திருந்த பொழுது அவரை நேருரை கண்டு சில கேள்விகள் கேட்க, அவற்றிற்கு அவர் அளித்த விடைகள் இங்குத் தரப்பெறுகின்றன. அவர்களின் தமிழக வரவின் நினைவாக இந் நேருரையும் அவரின் வழியனுப்பு விழாச் சிறப்பும் என்றென்றும் நம் நெஞ்சில் நிலைத்து நிற்குமாக!

நேர்வுரை

சா.சி. சுப்பையாவிடத்தில் நேருரை !

கேள்வி : 1

மதிப்பிற்குரிய பாவலர் ஐயா அவர்களே!

ஈப்போவில் உள்ள பாவாணர் தமிழ் மன்றம் எந்த ஆண்டில் தொடங்கப் பெற்றது? யார் தொடங்கியது? அதன் கடந்த காலப் பணிகள் என்னென்ன?

விடை :

ஈப்போ, திராவிடர் கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு 15 பணியாற்றி வந்த நான் பாவாணர் அவர்களின் தூய தமிழ்ப் பணியால் ஈர்க்கப்பெற்றுக் கழகச்சார்பில் தமிழ்நெறி மன்றம் என்பதை அமைத்து அதன்வழி தனித்தமிழர் உணர்வை வளர்த்து வந்தேன். திராவிடர் கழகம் தூய தமிழ் வளர்ச்சிக்குத் துணையாக இல்லை என்பதால் கழகத்திலிருந்து விடுபட்டு, ஏறத்தாழ 400 உறுப்பினர்களுடன் 1960-ஆம் ஆண்டு பாவாணர் தமிழ்மன்றத்தைத் தோற்றுவித்தேன். அக்கால் மன்றம் தோற்றமுற என்னுடன் இணைந்து நின்ற திருவாளர்கள் ம.செ. முத்துமாறன், அழ. அழகிரி, ஈ.மா. சார்ச்சு, இரா. கோவிந்தசாமி, தே. கண்ணுச்சாமி, ஆ. இராமநாதன், சித. முனுசாமி, சு.சி. கிருட்ணன், இ. லெ.க. தங்கவேல் போன்றோர்களைக் குறிப்பிடலாம்.

பாவாணர் தமிழ்மன்றம் அரசியல் சார்பற்று இனம், மொழி, கலை, பண்பாடு போன்ற துறைகளில் பணியாற்றியதுடன் தனித்தமிழ் வளர்ச்சியையும் பரப்பிவந்துள்ளது. மன்றத்தின் வளர்ச்சிக்கு முகாமையாக அமைந்த பேரறிஞர் பாவாணரின் நூல்களும், இருள்வானில் தோன்றிய எழுஞாயிறன்ன வந்த தென்மொழியெனும் திங்கள் இதழுமே எங்களின் தூயதமிழ்ப்பணிக்கு உறுதுணையாக அமைந்தன என்ற சொல்லலாம்.

கே : 2

தமிழர்கள் இப்பொழுது மலேசியாவில் எப்படிப்பட்ட வாழ்க்கைத் தரம் உடையவர்களாக இருக்கிறார்கள்?

வி :

மலேசியாவில் வாழ்கின்ற தமிழர்கள் இக்கால் அனைத்து நிலைகளிலும் எழுச்சி பெற்று வருவதுடன், ஒற்றுமையான உளப்பாங்குடன் பொருளியல் முன்னேற்றம் கண்டு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கே :3

மலேசிய அரசு இப்பொழுது தமிழர்களை எப்படி வைத்திருக்கிறது?

வி :

இப்பொழுது உள்ள மலேசிய அரசு நாட்டின் பொருளியல் முன்னேற்றங்காண கிழக்கை நோக்கும் புதிய கோட்பாட்டினை மக்களிடையே அறிமுகப்படுத்தித் தமிழர்கள் உயர்வதற்கான வாய்ப்பை நல்கி இருக்கின்றது.

கே : 4

அங்குள்ள அரசியல் இயக்கங்கள் என்னென்ன? தமிழர்கள் மிகுதியும் எந்த இயக்கத்தில் சேர்ந்து உழைக்கிறார்கள்?

வி :

அங்கு அம்னோ, ம.சீ.ச, ம.இ.கா, சனநாயகச் செயல்கட்சி, இசுலாமியக் கட்சி மற்றும் சில சிறுபான்மை அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இவற்றில் அம்னோ, ம.சீ.ச, ம.சிகா ஆகிய கட்சிகள் முகாமையானவையாக அமைந்து 'பாரிசான் நேசனல்' எனும் ஒருங்கிணைப்பால் நாட்டை ஆளுங்கட்சிகளாக இருந்து வருகின்றன. மலேசியத் தேசிய இனத்தின் பெரிய இயக்கமான அம்னோவின் பெருமைக்குரிய தலைவராகவும் மலேசியத்தின் முதல் அமைச்சராகவும் உள்ள மாண்புமிகு பர். மகாதிர் முகமது, துணையமைச்சர், மாண்புமிகு டந்தோ மூசா ஈத்தாம் போன்றோரின் தலைமையில் மலேசிய சீனர் சங்கமும், மலேசிய இந்தியர் பேராயமும் (காங்கிரசும்) இயங்கி வருகின்றன.

மலேசிய இந்தியர் பேராயத்தின் (காங்கிரசின்) ஏழாவது தேசியத் தலைவரான துடிப்பும் எழுச்சியுமிக்க தானைத்தலைவர் மாண்புமிகு டத்தோ சாமிவேலனார் அவர்களின் தலைமையின் கீழ், பொதுவாக இந்தியக் குமுகாயமும் குறிப்பாகத் தமிழர் குமுகாயமும் சிறந்த மேம்பாடு அடைந்து வருவதுடன், அவரின் மேலான திட்டங்களாகிய 'வாண்டோ, அகாடமி' இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்கும்; 'மைக்கா ஒல்டிங்' இந்தியர்களின் பொருளியல் வளர்ச்சிக்கும், மாமிகு அடிப்படைகளாக அமைந்துள்ளன. மலேசியாவின் பொதுப்பணித்துறை அமைச்சராகவும் இருந்துவரும் டத்தோ சாமிவேலனாரின் அரிய முயற்சியால் எதிர்காலத் தமிழர்களின் வாழ்வியல், கல்வியியல், பொருளியல் வளமான பயனை அடையும் என்பது தெளிவான கருத்தாகும்.

கே : 5

பொதுவாகச் சிங்கப்பூரில் உள்ள தமிழர்களுக்கும், மலேசியாவில் உள்ள தமிழர்களுக்கும் அரசியல், பொருளியல், வாழ்வியல் துறைகளில் என்னென்ன வேறுபாடுகள் உள்ளன? இந்த இரு நாடுகளிலும் உள்ள தமிழர்களில் எந்த நாட்டில் உள்ளவர்கள் கூடுதலான மேம்பாடு அடைந்திருக்கிறார்கள்?

வி :

சிங்கப்பூர் துறைமுக நகராகவும் உலகச் சந்தைகளில் ஒன்றாகவும் இருந்து வருவதால், அங்குள்ள தமிழர்கள் ஒருங்கிணைப்பான அரசியல், பொருளியல், வாழ்வியல்துறைகளில் உயர்வடைந்திருக்கின்றனர். மலேசியத் தமிழர்களின் மேனாள் தலைவர்களின் சரியான வழிகாட்டுதல் இன்மையால் இப்போதுள்ள தலைமையில் இக்கால் சரியான வாழ்வியல் திருப்பத்திற்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

கே : 6

தமிழீழப் போராட்டம் பற்றிய மலேசியத தமிழர்களின் கொள்கை என்ன? எந்த வகையில் தமிழீழத் தமிழர்களின் போராட்டங்களுக்கு மலேசியத் தமிழர்கள் துணை நிற்கிறார்கள்?

வி :

தமிழீழப் போராட்டம் பற்றிய கொள்கை மலேசியத் தமிழர்களிடையே ஆங்குள்ள இன்றையச் சூழலில் பேரளவு இடம் பெறவில்லை. என்றாலும் உள்ளார்ந்த நிலையில் பல்லாற்றானும் உறுதுணை செய்யவேண்டுமெனும் உணர்வு இருந்து வருகிறது. அண்மையில் ஈழத்திலிருந்து வந்த பதினைந்து ஏதிலி (அகதி)களைத் தம் இல்லத்தில் இருத்தி, இரு திங்கள்வரை உறையுள், உணவு, உடை முதலியன தந்து ஆதரித்து வந்தவர் எங்கள் பாவாணர் தமிழ்மன்றத்தின் புரக்குநர் தமிழ்த்திரு வேதநாயகம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே : 7

தமிழ் நாட்டிலிருந்து மலேசியா வருகின்ற தமிழர்களுக்குப் பாவாணர் தமிழ் மன்றம் எந்தெந்த வகையில் ஆதரவு கொடுக்கிறது?

வி :

தமிழ்நாட்டிலிருந்து மலேசியா வருகின்ற போலிமையாளர்களை விடுத்துச் சான்றாண்மை மிக்க தமிழ் அறிஞர்களையும் தமிழ்த்தூதுவர்களையும் அன்புடன் வரவேற்று அரவணைத்து விருந்தாட்டித் தக்க முறையில் பேணிப்புரந்து தமிழ் விருந்து தரச்செய்து உவகை பொங்க வழியனுப்பி வைக்கும் பணியைப் பாவாணர் தமிழ்மன்றம் செய்து வருகின்றது.

கே : 8

தமிழீழப் போராட்டத்தில், தமிழீழ விடுதலைக் கூட்டணியின் தன்மையை, மலேசியத் தமிழர்கள் எந்த வகையில் கணித்திருக்கிறார்கள்?

வி :

தமிழீழ விடுதலைக் கூட்டாளியினர் செறிவான ஒருங்கிணைப்பும் தெளிவான திட்டங்களும் இன்றிச் செயற்பட்டு வருவதாக மலேசியத் தமிழர்கள் கணித்திருக்கின்றனர்.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க

ஊர்தோறும் உ. த. மு. க. கிளைகள் அமையுங்கள்!

தொடர் : 4 :

உலகத் தமிழின முன்னேற்றக் கழகக்

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

• — நிகழ்ச்சிச் சுருக்கம் —

அளவுக்கு அதிகமாக உட்கொண்டால், எழுந்து சுறுசுறுப்பாக நடப்பது கடினமாகிவிடும், உடலின் தன்மை அத்தகையது; ஆனால் அறிவின் தன்மை தனித்தன்மை வாய்ந்தது—நிறைய அறிந்துகொள்ள அறிந்துகொள்ள சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்கிவிடும்.

அதுபோன்று அறிவு நிரப்பப்பட்ட களத்தைச் சுமந்து கொண்டு அனைவரும் சுறுசுறுப்புடன் இயங்கினர்.

ஏழாம் நாள் விடை 24 (27-5-84) வகுப்பு ஆய்வாளர் மாளிகையின் முன்புற நிழலிலேயே நடத்தப் பெற்றது. காலை வகுப்பிற்கு முன் தமிழ் வாழ்த்து ஒலிபரப்பப் பெற்றபின் உணர்வு குன்று தென்மொழியன்பரும், உலகத்தமிழின முன்னேற்றக் கழக அருட்கொடையாளருமாகிய பல்லடம். மா. ஆறுமுகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து உரவோரையும் மா பொழிலன் வரவேற்றுப் பேசினார். நாகரிகம் என்பது புறவளர்ச்சி கொண்டது, பண்பாடு என்பது அகவளர்ச்சி கொண்டது என்கிற நிலையில் கூறிவிட்டுத், திட்டமிடப்பெற்ற பொதுவுடைமைப் பூத்துக் குலுங்கும் தனித்தமிழ் நாட்டின் தேவை பற்றிக் கூறிவிட்டு அனைவரையும் வரவேற்றமர்ந்தார்.

தலைவர் திரு. மா. ஆறுமுகம் அவர்கள் கழக வளர்ச்சிக்கு இளைஞர்கள், மாணவர்கள் பங்கு மிக மிக இன்றியமையாதது. எனவே மாணவர்களையும், இளைஞர்களையும் அறிவூட்டி வளர்த்தெடுக்கவேண்டும் என்றுக் கூறிவிட்டு அன்றைய வகுப்பை எடுக்க இருந்த பல்லடம் முத்துக்குமரனாரை உரையாற்ற அழைத்து அமர்ந்தார்.

'தமிழின நாகரிகப் பரவல்' எனுந் தலைப்பின் கீழ், நெடுநாளைய தென்மொழி அன்பரும், புரக்குநரும், அரும் பெருந்தொண்டருமாகிய திரு. முத்துக்குமரனார் அவர்கள் மிகவும் வடிவமாக அழகுற பல கருத்துகளை வெளிப்படுத்தினார்கள்.

'தமிழின நாகரிகப் பரவல்' எனும் நிலையில் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர் தம் சொல்விளக்கத்தைப் பண்பாடு, நாகரிகம் ஆகிய இரு சொற்களுக்கும் அளித்துவிட்டு, வள்ளுவர் தம் வாய்மொழியான 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்பதையும் கூறிவிட்டு மிக அழகுற நாகரிகப் போங்குகளை விளக்கினார்.

'While the Dravidians were Aryanised by language, Aryans were Dravidinished by Culture'

— அஃதாவது மொழியால் திராவிடர்கள் ஆரியர்களாக்கப் பெற்றார்கள என்றால், பண்பாட்டால் ஆரியர்கள் திராவிடர்களாக்கப் பெற்றார்கள் எனும் அருமையான ஆங்கில வரலாற்றறிஞரின் கருத்தைக் கூறிப் பண்பாடு தொடர்பாகவும் விளக்கிக் கூறினார்.

மார்க்கியம் தமிழினத்திற்குத்தான் மிகமிகத் தேவை என்றும், சில புலவர்கள் அதை உள்ளத்திற்கு ஒவ்வாததால் ஏற்க மறுக்கின்றனர் என்றும், திருக்குறளிலேயே எல்லாமும் இருக்கின்றது என்று கூறிவிட முடியாது, நாம எண்ணியதற்கு மேல் இருக்கிறதேயொழிய திருக்குறளில் இடம்பெறாத அறிவும் ஏராளமாக இருக்கிறது என்றும் கூறிவிட்டுத் தம் பேச்சை முடித்துக்கொண்டார்.

திரு. முத்துக்குமரனார் பொழிவிற்கிடையில் தாம் சரியான தமிழ்ச் சொல்லாக தெரிந்துஅறியாத Sincere, Nepotism ஆகிய இரு சொற்களுக்கும் நேரிடையான தமிழ்ச் சொல்லைக்கூறும் பொருட்டும், அதன் மூலம் காட்டும் பொருட்டும் சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி அவர்களைக் கேட்டுக் கொள்ள, அருளியார் அவர்கள் அவற்றை அடுத்து விளக்கப்படுத்தினார்கள்.

உண்மை, வாய்மை, மெய்ம்மை ஆகிய சொற்களுக்கு மூலம் காட்டி அவை உருக் கொண்ட வகைகளை விளக்கப்படுத்திவிட்டு, Sincere — என்னும் சொல்லுக்கு 'நேரிதான' எனத் தமிழில் கூறலாம் என்றும், Nepotism — என்னும்சொல்லுக்கு 'சாய்கோடல்' எனத் தமிழில் வழங்கலாம் என்றும் கூறிவிட்டுத் தம் விளக்கத்தை முடித்துக் கொண்டார்கள்.

பத்துநிமைய இடைவெளிக்குப் பின்னர் அடுத்த வகுப்பு தொடங்கப்பெற்றது. 'நாட்டுத் தொண்டில் மாணவர் பங்கு' எனுந் தலைப்பின் கீழ் பல்லடம் வட்டத்தில் தமிழ்ச்சிட்டை நிறைய பரப்பிப் பல கொள்கைப்பணிகளை விடாது செய்து கொண்டு வருகிற திரு. செ. திருமேனியும், திரு. சீனி. செந்தேவனும் வகுப்பெடுத்தனர். மாணவர்கள் இருக்கின்ற இழிநிலைகளைச் சுட்டிக்காட்டிவிட்டு, அவர்கள் எந்த எந்த அளவில் நாட்டிற்குப் பயனுடையவர்களாக விளங்கவேண்டும் என்றும், எந்த அளவில் கொள்கைகளை மாணவர்களிடம் விதைக்க வேண்டுமென்றும் கூறிவிட்டுத் தத்தம் உரைகளை முடித்துக் கொண்டனர்.

பிறபகல் வகுப்பு 3 மணியளவில் தொடங்கப் பெற்றது. நெடுநாளைய தென்மொழி அன்பரும், திருச்சி மாவட்ட உ.த.மு.க. செயலாளருமாகிய திரு. நாரா. மகிழ்நன் தலைமை தாங்கினார். உரவோர் அனைவரையும் சென்னை (வடக்கு) மாவட்ட அமைப்பாளர் திரு. ப முருகவேள் வரவேற்றார். கடந்த வகுப்பு நிகழ்வுகளைப் புகழ்ந்து கூறித் தென்மொழியின் அருந்தொண்டைப்பற்றி எடுத்தியம்பி அனைவரையும் வரவேற்றமர்ந்தார்.

பழனி, கலை, பண்பாட்டுக் கல்லூரித் தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் ப. காளிமுத்து அவர்கள் 'தமிழ் இலக்கிய அமைப்பு' என்ற தலைப்பின் கீழ் தமிழ் இலக்கியச் செழுமையையும், விரிவையும் விளக்கிவிட்டு அவற்றின் செப்பமான அமைப்புகளை அழகுறத் தெளிவாக விளக்கினார்.

அவரைத் தொடர்ந்து பேராசிரியை, திருவாட்டி பிரிதி காளிமுத்து அவர்கள் 'தமிழின முன்னேற்றத்தில் மகளிர் பங்கு,எனுந் தலைப்பின் கீழ், தமிழின முன்னேற்றம் என்பது என்ன, அதில் ஒவ்வொரு தமிழரின் பங்கின் தேவையும் ஏன், அந்நிலையில் மகளிர் ஆற்றவேண்டிய தொண்டு எது என்பன பற்றியும் சுருக்கமாகக் கூறிவிட்டுத் தம் பேச்சை முடித்துக்கொண்டார்கள்.

மாலையில் தனித்தனியே அன்பர்கள் கலந்து பேசிக்கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்துச் சொல்லாய்வறிஞர் ப. அருளியார் அவர்கள் 'பந்து', 'கொப்புளம்' ஆகிய இரு சொற்களுக்கும் சொல் மூலம் காட்டி, அச்சொற்கள் எவ்வகையில் தமிழ்ச் சொற்களென்றும், அவை ஓங்கிப் பரந்துவளர்ந்த நிலை எத்தகையது என்றும்—தெளிவாக ஏறத்தாழ ஒன்றரை மணிநேர அளவிற்கு விளக்கிக் கூறினார்கள். அருளியார் அவர்களின் நீண்ட ஆய்வுப் பொழிவிற்குப் பின்னர், பாவலரேறு ஐயா அவர்களின் முன்னிலையில் கலந்துரையாடல் நிகழ்ந்தது.

ஐயா அவர்கள் உரவோர்கள், ஆசிரியர்கள் அனைவர்க்கும் விளக்கப்படுத்தும் முகத்தான் பல அரிய செய்திகளைக் கூறினார்கள்.

பயிற்றாசிரியர்கள் பெரும்பாலும், ஒருசிலரைத் தவிர அனைவரும் கொடுக்கப்பெற்றத் தலைப்பிற்குள் செறிவுற கருத்துகளைக் கொடுக்கவில்லை என்றும் அதற்கான முயற்சிகளை அவர்கள் செய்துகொண்டு வரவில்லை என்றும் வருத்தத்துடன் கூறினார்கள்.

மேலும் உரவோர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்கவேண்டும்,குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், வகுப்பிற்குச் சரியான நேரத்தில் வந்து அமரவேண்டும் என்றும் செப்பமான முறையில் ஒழுங்காக அமர்ந்து பயில வேண்டும் என்றும் வெகுவாகக் கூறிவிட்டு,

உரவோர்கள் குழுவை அவரவர் விருப்பத்திற்கேற்ப, இயங்கு நிலைகளுக்கேற்ப முப்பகுப்பாகப் பிரிக்க எண்ணி மொழியியல் உரவோர், இனவியல் உரவோர், நாட்டியல் உரவோர் எனப் பகுத்து,அக்குழுவினரைத் தனித்தனியே அமர்த்தினார். தனித்தனியே ஒவ்வொரு குழுவின் கடமையையும், தேவையையும் விளக்கப்படுத்திவிட்டு, மறுநாள் காலை 6 மணிக்கே வகுப்புத் தொடங்கப்பெறும் என்றும் அனைவரும் குறிப்பிட்டநேரத்தில் சரியாக வந்துவிடவேண்டும் என்றும் கண்டிப்பாகக் கூறினார்கள்.

குழுவினர் தனித்தனியே அமர்த்தி வைக்கப் பெற்ற பின்னர்தான், எவரெவர் என்னென்ன உணர்வழுத்தம் உடையவராக இருந்திருக்கிறார் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

நாட்டு நிலைகளைப் பற்றி அழுத்தமாகவும் ஆர்வமாகவும் பேசிக்கொண்டிருந்த சிலர் வெறும், மொழி நிலையில் மட்டும் ஈடுபாடு காட்டுவோராகத் தங்களை ஒதுக்கிக்கொண்டது வருத்தமாக இருந்தது.

எனைவகையான் தேறியக் கண்ணும்
வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர்'

என்னும் குறள்மொழி எத்துணை உண்மையானது என்று அறிய முடிந்தது.

ஐயா அவர்களின் நீண்டநேர நெறிமுறை விளக்கத்தோடு அன்றைய வகுப்பு சிறப்புற முடிவுற்றது. (தொடரும்)

நாளும் ஏழை நலிவையே கண்டான்!

2-5-84-ஆம் பக்கல் 'இந்து' ஆங்கில நாளிதழில் 1981-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அரசு தெரிவித்துள்ள விளத்தம் கீழ்வருமாறு ;

"தமிழகத்தில் 4.5 கோடிப் பெயரில் 88 இலக்கத்து 81 ஆயிரத்து 295 பெயர் (ஏறத்தாழ ஒரு கோடிப் பெயர்) தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

இவர்களில், 55 இலக்கத்து 95 ஆயிரத்து 215 பெயர்கள் நிலமற்ற அன்றாடக் கூலி (வேளாண்மை) உழைப்பாளிகள். 18% (விழுக்காட்டினர்) மட்டுமே (15,98,630) தங்களுக்கென்று துண்டு துணுக்கு வேளாண்மை நிலமுடையவர்கள்.

தமிழகத்துத் தாழ்த்தப்பட்ட மக்களில் 81 விழுக்காட்டினர் (71,93,800) அன்றாடக் கூலிகள்"; இந்தியா விடுதலை(!) பெற்று 37 ஆண்டுகள் ஆகியும் இன்னும் எவ்வகை முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரிய திட்டங்களால் அளப்பரிய நன்மைகளைக் குவித்து விட்டதாக அலறும் அரசினர் இதற்கென்ன விடை சொல்லப் போகிறார்கள்.

"நாளும் ஏழை நலிவையே கண்டான்;
நாடாளும் பதவிகள் பணக்காரன்
கொண்டான்"

என்கிற எந்தமிழரிமாவின் கூற்று வீணில்லையன்றோ?

வெற்று முழக்கங்களும், வீண் ஆரவாரங்களும் இந்திய மாயையில் சிக்கவைத்துள்ளதைத் தமிழகத்துத்தலைகள்(!) உணரவேண்டும்!

செய்தி: அறிவியக்கம்

— தாரை. தமிழ்வென்றி

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"இருப்புப்பாதைத் துறையும் அஞ்சல் துறையும் ஒரே நடுவண் அரசின் கீழ் உள்ளவைதாமே, அண்ணா"

"ஆமாம்".

"தமிழ்நாட்டில் இருப்புப்பாதை நிலையங்களின் பெயர்ப்பலகைகளில் தமிழுக்கு முதலிடமும் இந்திக்கு இரண்டாவது இடமும் கொடுக்கப்பட்டிருக்க, அஞ்சல் நிலையப் பெயர்ப்பலகைகளில் எல்லாம் இந்திக்கு முதலிடமும் தமிழுக்கு இரண்டாவது இடமும்தானே தரப்பட்டுள்ளது!"

"ஆமாம்."

"இந்த வேறுபாடு ஏன் அண்ணா!"

"சொல் தம்பி,"

"இந்தியை எதிர்க்குந் தமிழர்களிடமும் இருப்புப் பாதைப் பெயர்ப்பலகைகளைக்காட்டி உங்கள் தமிழுக்குத்தான் முதலிடம் என்று ஏமாற்றவும், இந்திவெறியர்களிடம் அஞ்சல்நிலையப் பெயர்ப்பலகைகளைக் காட்டி இந்திக்குத்தான் தமிழ்நாட்டிலும் முதலிடம் என்று கூறவும்தான் அப்படி எழுதப் பட்டுள்ளதோ?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

உ.த.மு.க.வை வலுப்படுத்துக!

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

3. உள்ளேயும், வெளியேயும் நாம் போராட்ட உணர்வுடன் பெறுகின்ற உறுதி, மனத் திண்மையை மாணவர்களும் பெற வாய்ப்பாக இந்த அரங்கம் பயன்பட வேண்டும்.

4. நாட்டுக்கு நாடு இலக்கியம் வேறுபடுகிறது. 'உலகில் மூத்தமொழி தமிழ்' என்று பாராட்டிக் கொண்டபோது, பெருமைப் பட்டுக் கொண்டபோது. 'மறைவாக நமக்குள் பழங்கதை' பேசுவதை எதிர்த்தனர்.

5. இன்று தமிழின் மூன்மை, நாகரிகம் அறிவியல் ஆய்வின் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

6. மீண்டும் கட்டப்படுகிற நாடு கம்போடியா. அதை அவர்கள் மொழியில் கம்பூச்சியா என்று மாற்றிக் கொண்டனர். காட்டுள் புதைந்து கிடந்த நகரினை அகழ்வாராய்ச்சியில் கண்டு பிடித்துள்ளனர். 'ஹாங்கோ' என்று அந்த நகரைக் கூறுகின்றனர். அதனைத் தமிழில் அழகியநகர் என்று - திருநகர் - என்று பொருள் படுத்தலாம். இதனை இன்றுள்ள 'இலண்டன்' நகர்க்கு ஈடானதென்று கூறலாம்.

7. இந்த 'ஹாங்கோ' நகர், 2000 ஆண்டுகட்கு மூத்தியது. பாண்டிய, சோழ மன்னர்களால் கட்டப் பட்டது. இங்குக் காணப்படும் தமிழ் எழுத்து, கோபுரம், சித்திரம் இதனை நிலைநாட்டும்.

8 'ஹாங்கோ' நகரம் 'தமிழர்' இழந்த நகரம். இதனைத் தமிழர் மீட்க ஏன் முன்வரவில்லை? இந்த வனவிற்கு விடைகாண அனைத்து நாட்டுப் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) ஒரு திரைப்படம் எடுத்துத் தமிழ்நாட்டிற்கு அனுப்பியது!

9. இப்படத்தை எத்தனைத் திரையரங்குகள் போட்டுக் காட்டின? எத்தனைத்தமிழர் பார்த்திருப்பார்?

10. கருத்தெழுதக் கூறிய நிறுவனத்திற்கு (UNESCO) ஏழு மடல்கள் தமிழ்நாட்டிலிருந்து போயின. அவற்றில் நான்கு 'விளக்கம் தெரியவில்லை' என்றன. மூன்று 'மூவேந்தர்கள் கட்டிய நகர்' என்ற குறிப்பை எழுதின.

11. இதனைப் பற்றிக் கல்வித் துறையோ, ஆராய்ச்சித்துறையோ அக்கறை காட்டவில்லையே ஏன்?

12. 'மாக்கடல் மர்மங்கள்' என்ற நூலைப் படியுங்கள். அதிலே உலகவுருண்டையில் நிலப் பகுதியை விடப் பத்துமடங்குள்ள கடல்வளம் பற்றித் தெரிந்து கொள்ளலாம். குமரிமுனைக்கு 600 கிமீ தொலைவுள்ள இடத்தில் 'இலெமூரியாக் கண்டம்' என்கிற அதன் நகரம அப்படியே உள்ளது. அதில் ஒரு சாளரம் கூடச் சேதமின்றி உள்ளதாம். அறிவியல் அடிப்படையோடு இதனை நிறுவியுள்ளார்கள். இப்படித் தமிழ்நாட்டின் வரலாறு புதைபட்டுக் கிடக்கின்றது.

13 தகுதியுள்ள மக்களின் மொழி, ஆற்றலைப் பெற்றிருக்கும் நாம் 'எடுபிடி', நமது மொழியும் எடுபிடியாக்கப்பட்டு வருகிறது.

14. மொழி ஆளுமை சொந்த உணர்வே செயல்பட, இழந்த பெருமையை மீட்டுப் புதுப் பெருமையினை நிலைநாட்டுதல் வேண்டும்.

15. மாணவர்கள் படிக்கும்போதே அறிவைத் தேடவேண்டும். உடலை வலுவாக்க வேண்டும். விரிந்த பார்வை வேண்டும்.

16. படை வலியதன்று. மக்களின் ஆற்றலே வலிவுள்ளது. 'கணப் பயிற்சியாக' வகுப்பறைக்கும் அப்பால் தருக்க மேடையாக-கருத்தரங்காக மன்றம் பயன்படவேண்டும்.

17. படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்பை அரசு தரவேண்டும்.

விடுதலை முதல்வேண்டும்! வெகுண்டெழுந் திடவேண்டும்!

தன்னாட்சி யின்றி மொழியினம் நாடு
முன்னேற முடியாது! — அடிமை
விலங்கும் ஒடியாது — நமக்கு
விடிவும் கிடையாது.

தில்லிவல் லாட்சிக் குள்ளே, யிருந்தால்
தன்னாட்சி வாராது! — இழிவு
தாழ்வுகள் தீராது — பார்ப்பனர்
தந்நலம் மாறாது.

இன்னல்செய் வோரை ஏனென்று கேட்க
இலைநமக் கதிகாரம்! — இருந்தால்
ஏதிங்குப் பிறர்வீசம் — ஓட்டம்
எடுப்பார் வடக்கோரம்.

நம்மாட்சி நம்மிடம் இல்லாத தாலே
நாமேதிலி யானோம் — உலகம்
நகைக்கும் இனமானோம் - வேற்று
நாட்டவர் போலானோம்.

தாழ்வோடு இழிவு துன்பங்கள் அடிமை
தன்னாட்சி யால்மாளும் — அன்னைத்
தமிழ்மொழி அரசாளும் — நம்மினம்
தலைநிமிர்ந் தே வாழும்.

மாற்றான் கையிருக்கும் நம்மாட்சி தன்னை.
மீட்டிட வே வேண்டும் — மீட்க
விடுதலை முதல்வேண்டும் — அதைப்பெற
வெகுண்டெழுந் திடவேண்டும்.

பாவலர். சின்னப்பனார்

18. 'ரொபார்ட்சு' என்னும் 'எந்திரமாந்தன்' வளர்ச்சி 'மாந்தனின்' வேலையை எல்லாம் செய்யும். 'ஆர்ட்பூச்வால்' கூறுவதுபோல காவல்துறை-மற்றும் அனைத்தும் 'எந்திரமாந்தன்' பிடித்துக் கொண்டால், சாதி, மதம், ஏன் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி பாராமல் முறையாக நடக்கும். சொல்லித்தர ஆசிரியர் எந்திர மாந்தன்' எனில், படிப்பதற்கு மாணவர் மறுத்து' 'எந்திர மாந்தனே படிக்க வேண்டியும் வரும்!

19. நாம் அறியியலைத் தொடும்போதே - பழைய செத்துப்போன கண்ணழகு - காதல் படிமங்களை எழுதாமல் புதிய படைப்புச் செய்ய வேண்டும்.

புதியமாந்தன் தோன்ற வேண்டும். அந்த மாந்தனை உருவாக்கும் தாகம் அறிவியலில் தோன்ற இப்படிப்பட்ட மாணவர் அரங்கம் பயன்பட வேண்டும்.

இவ்வாறு தா. பாண்டியன் கூறிய கருத்துகளை உங்களோடு பரிமாறிக் கொண்டு, எதிர வரும் கருத்துகளுக்குப் பிறகு நானும் எழுதுவேன்.

அன்புடன், — பறம்பை அறிவன்.

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில்வெளிவரும் உயர்ந்த இலக்கியஇதழ் ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனியிதழ் :	1.25	3-00	3.00
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	40 உருபா	35உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	20 ,,	18 ,,
வாழ்நாள்கட்டணம் :	200 ,,	—	—

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

கே : 9

தமிழீழக் கூட்டணியின் பொதுச் செயலாளர் திரு அமிர்தலிங்கத்தைப் பற்றிய தாங்கள் கருத்தென்ன? தமிழீழப் போராட்டத்தில் திரு. அமிர்தலிங்கத்தின் நடைமுறைகளைப் பற்றிப் பெரும்பாலான மலேசியத் தமிழர்களின் கருத்து எதுவாகஇருக்கிறது?

வி :

தமிழீழக் கூட்டணியின் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வழுவிய நிலையில் சென்று கொண்டிருக்கிறார் எனக் கருதுகின்றேன். திரு அமிர்தலிங்கத்தின் நடைமுறைகளில் மலேசியத் தமிழர்களிடையே நிறைவான எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

கே : 10

தமிழ்நாட்டு அரசியல் இயக்கங்களைப் பற்றி, குறிப்பாக அ தி.மு.க, தி.மு.க தி.க. பற்றி அங்குள்ள தமிழர்கள் என்ன கருதுகிறார்கள் ?

வி :

தமிழ்நாட்டு அரசியல் இயக்கங்களில் அ.தி.மு.க' ம.கோ.இராவுடன் முடிந்துவிடும் என்றும்,தி. மு. க. கலைஞருக்குப்பின் சிறப்பாக இயங்காது என்றும், தி.க. வீரமணியுடன் தேய்ந்துபோகும் என்றும் அங்குள்ள தமிழர்கள் கருதுகிறார்கள்.

கே : 11

நம் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தங்கள் கருததென்ன? மலேசியாவில் உள்ள தமிழர்களிடத்தில் இவ்வியக்கம் எந்தவகையில் தொடர்பு கொண்டு பணியாற்ற இயலும்?

வி :

இனவிடுதலைக்கும் தமிழர் உரிமைக்கும் மொழித் தூய்மைக்கும் ஆழ்ந்த அடிப்படையாக அமைந்துள்ள உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் தமிழகத்தில் ஆங்காங்கு பிரிந்துகிடக்கும் இனவுணர்வும மொழியுணர்வும் விடுதலை வேட்கையும உடைய சிறந்த ஆற்றல்மிக்க அறிஞர்களும் சீரிய தொண்டர்களும் ஒன்றி இணைந்து செயற்படின் தமிழினத்தின் தனிப்பேரியக்கமாக உ.த.மு.க. இயங்கமுடியும் என்று கருதுகின்றேன்.

மலேசியாவில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கிளைகளை அமைத்துத் தக்க தமிழ் உணர்வாளர்களை ஒருங்குதிரட்டி, ஆங்குள்ள தமிழ்மன்றங்கள் சங்கங்களையும் ஒருமைப்படுத்தி அரசியல் சாராத இயக்கமாக உ.த மு.க.வின் இனம், மொழி, கலை, பண்பாடுகளைப் பரப்பத் தொடர்பு கொண்டு பணியாற்றலாம்.

கே : 12

தங்களின் தென்மொழி ஈடுபாட்டைப் பற்றியும், பாவாணரின் தமிழ் வளர்ச்சிப் பணிக்குத் தாங்கள் துணை நின்றது பற்றியும் சிறு விளக்கம் தர முடியுமா ?

வி :

தமிழ்க்குமுகாயத்தை கெடுத்துக் கொண்டுவந்த அருவருப்பு மிக்க குப்பைகளான இதழ்களுக்கிடையே எழுஞாயிறன்ன ஒளிவிட்டுத் தென்மொழி தமிழினத்தின் மாணிக்க முத்திரையாக இருந்ததைக் கண்டு, அதன்பால் பேருணர்வு கொண்டு மலேசியாவில் பரப்பவேண்டுமென்றும் ஒரு பாட்டுடன் பணி புரிந்தேன். மொழிப் பேரறிஞர் பாவாணரின் தூயதமிழ்ப்பணிக்கு ஆக்கம் தரவேண்டும் எனும் உள்ளத்துடிப்புடன் என்னால் முடிந்த அளவு தொடர்ந்து பொருளுதவி செய்துவந்துள்ளேன். நெஞ்சமுருக்கும் 150 மடல்களை பொன்னே போல் போற்றிக்காப்புடன் வைத்திருக்கின்றேன். எனக் குற்ற குறையெல்லாம் பாவாணர் அவர்களை உயிருடன் கண்டுமகிழ்ந்து அவர் மலரடி போற்ற இயலவில்லை என்பதுதான். 0

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றப்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: N'/MS(C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்

தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு. திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.